
# காதலும் கற்பும்



மறுமலர்ச்சிக் கவிஞர் புதுவைச் சிவம்

# கருத்துரை

*தமிழ்மாணி, புலவர்.* **பூங்கொடி பராங்குசம்**

சங்க இலக்கியங்கள் வகுத்த அகம், புறம் என்னும் நிலைகள் இரண்டனையும் ஆய்வு செய்தால், அவை அக்காலம் வாழ்ந்த மக்களின் நடைமுறை வாழ்வியலையே உணர்த்துவதாக அறியலாம்.

அகப்பாடற் பொருளெல்லாம் களவு, கற்பு ஒன்றுடனொன்று தொடர்ந்தே அமைந்துள்ளன. குறிப்பாகக் களவில் காதலும் ஒருங்கிணைந்து அமைவது பிரிக்க இயலாத தொன்றாகிறது.

ஐந்திணைப் பகுப்புகளுக்கே தொல்காப்பியம் விளக்கமளித் திடினும் களவு, கற்பு என்னும் இருநிலைகளுக்குத்தான் முதலிடம் அவற்றில் அமைவதாக இருக்கிறது. ஐந்திணையில் குறிஞ்சியில் மட்டுமே களவுக் காதல் பெரிதும் போற்றப்படுகிறது.

அறத்தொடு நிற்றல் வாயிலாகத் தலைவி கொண்ட களவுக் காதலைக் குறிஞ்சிப்பாட்டுப் போன்ற பெரிய தனிப்பாடல்கள் வெளிப்படுத்தும் திறனை வியக்காதார் எவருமிலர்.

தொல்காப்பியம் இதனைத்தான்.

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பால தாணையின்**
**ஒத்த கிழவனும கிழத்தியும் காண்ப"**

என்கிறது.

இக்கருத்தினை யொட்டியே பிறந்த சங்க இலக்கியப் பாடல்தான் கிழ்வரும் குறுந்தொகைப் பாடலும்.

**"யாயும் ஞாயும் யாரா கியரோ?**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?**
**யானும் நீயும் எவ்வழி யறிதும்?**
**செம்புலப்பெயல்நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே!"**

இத்தகைய சங்க இலக்கியப் பாடல்களால் காதலின் உயர்வு - இயற்கைப் புணர்ச்சி - இடந்தலைப்பாடு - பாங்கற்கூட்டம் - பாங்கியற்

கூட்டம் – இற்செறித்தல் – வரைவு கடாதல் – அறத்தொடு நிற்றல் போன்ற பல்வேறு நிலைகளில் பழந்தமிழரின் களவு, கற்பு பாழ்வ்கை தொடர்பான நிகழ்வுகளின் இலக்கணமாய் விளங்குகின்றது.

தொடர்ந்த இத்தகைய களவும், கற்பும் பிற்காலத்தில் சிற்றிலக்கியங்களில் காதலை மட்டுமே முன்னிலைப்படுத்தும் முறைமையில் பெருகி வளர்ந்தன. இவற்றில் உலா, தூது போன்ற சிற்றிலக்கியங்கள் காதலை மட்டுமே சுவைப்படுத்தி முன்நின்றன.

இத்தகைய உயரிய காதலும், கற்பும், அறவாழ்வும் ஆரியர்களின் வருகைக்குப்பின் பெரும் மாற்றத்திற்குள்ளாயின.

மேலும் தீண்டாமைக் குறியீட்டான சாதிக் கோட்பாடு நுழைக்கப்பட்ட பிறகு, மூடப்பழக்கங்கட்கு மக்களின் அறிவு அறியாமை இருளால் முடக்கப்பட்டது.

இதன் விளைவாகப் பெண்கல்வி முழுதும் மறுக்கப்பட்டுப் பெண்ணடிமைநிலை வேரூன்றியபோது, காதலும் களவும் திசைமாறின. அறவழி வாழ்க்கை ஆரியர்களால் புறநிலைக்கு மாறியது. இதன் காரணமாகக் கற்பு ஒன்றே பெண்ணினத்தின்மீது திணிக்கப்பட்ட அடையாளக் கூறானது.

உணர்வும் உரிமையும் இழந்த நிலையில், பெண்ணினம் ஆணாதிக்கத்தால் அல்லற்பட்ட நிலையில், முற்போக்கு எண்ணமுடையோர் எடுத்த தற்காப்புக் கலைதான் பெண்ணுரிமையெனும் பெரும் போராட்டம்.

நற்சிந்தனையாளர்களின் நாவன்மையினாலும் எழுத்துப் புனைவுகளாலும் மிகப் பெரிய எழுச்சிக்களமாகவே குமுகாயம் மாறத் தொடங்கியது இதனால் தான்.

தன்மான இயக்கத் தலைவராம் பெரியாரின் பெருந்தொண்டர் பாசறையில் தம்மை இறுக்கமாகப் பிணைத்துக்கொண்ட மறுமலர்ச்சிப் பாலவர் புதுவைச் சிவம் அவர்களும் மூடப்பழக்கத்தின் முடை நாற்றத்தை நீக்கும் முற்போக்குச் சிந்தனையாளராகத் திகழ்ந்தார் என்பதற்கு அவருடைய படைப்பியலே சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

அறம் சார்ந்த கொள்கைப் பாதையிலேயே தம்முடைய வாழ்நாள் முழுதும் பயணித்தவர் புதுவைச் சிவம் அவர்கள். சொல்வேறு, செயல்வேறு என்னாது மாற்றங்கள் பல இருந்தும் மாறாத நெஞ்சுறுதி கொண்டவர்; தம் இயக்கக் கருத்தக்களையே எழுத்துக் களத்தில் விதைத்த இனமான எழுச்சிப் பாவலர்;

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையில் பிறழ்வு கொள்ளா மறத்தமிழர்; தடுமாற்றமின்றித் தாம் செல்லும் தன்மான இயக்கத்தின் தடைக்கல்லை நீக்குதற்கு இடையூறு நிகழாவண்ணம் கருத்துக்களைப் பரப்பி வாழ்ந்த களப்போராளி; எழுத்தும் இயக்கமும் இவரை எப்போதுமே யாரென அடையாளங் காட்டும் வழிகாட்டிகள். பகுத்தறிவுச் சிங்கத்தின் பண்பட்ட தொண்டரெனப் பல்லோராலும் பாராட்டப்பட்ட பகுத்தறிவுப் பாவலர் தாம் கவிஞர் புதுவைச் சிவம் அவர்கள்!

பெரும்பாலும் கவிஞர்கள் அழகைப் பற்றியும் இயற்கையைப் பற்றியும் பாடுதலிலேயே உள்ளம் களிப்பர். ஆனால் சிவம் அவர்களோ,

**“மூடச் செயலெல்லாம் முற்றுந் தொலையாமுன்**
**நாடாது தன்னரசு”**

என்னும் கொள்கையில் உறுதியாக நின்றவராதலின், தாம் சார்ந்த இயக்கத்தின் கொள்கைகளையே தம் கவிதைகளுக்குப் பாடுபொருளாக்கிக் கொண்டார். அதன் விளைவுதான் சங்க இலக்கியத் தமிழரின் வாழ்வு மீண்டும் தழைத்திட எண்ணும் வகையில், ‘ காதலும் கற்பும்’ என்னும் முற்காலக் காதலை விளக்கிப் பிற்காலக் கற்புக்கு இலக்கணம் வகுக்கிறார்.

இடைப்பட்ட காலத்தில் பெண்ணுரிமையை மீட்டெடுத்தும் பின் தொடரும் கால வேறுபாட்டால் காதலும் கற்பும் கூட இன்று இலக்கணம் மாறிச் சென்றுகொண்டிருப்பதை எண்ணி மனம் துன்புறுகிறது.

மேனாட்டுப் பண்பாட்டின் தாக்கம் தமிழ்நாடடின் இலக்கியக் காதலையே இரண்டாம் நிலைக்குப் புறந்தள்ளிய இன்றைய நிலையை எண்ணி உளம் வருந்த வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஆயினும் கவிஞர் சிவம் போன்றோரின் கருத்துக்களைக் கவிதைகளில் காணும்போது மீண்டும் ஒரு மாற்றத்திற்கு எடுத்துக் காட்டாகவுமிருக்கலாம். அதே நேரம், சங்க இலக்கியத் தாக்கம் மீண்டும் தமிழ்நாட்டில் தழைக்க எண்ணிய இத்தகைய புலவர்களின் சிந்தனையை நாம் போற்றத்தான் வேண்டும். அது நம் கடமையும்கூட. ஏனெனில் பழமைதான் அடுத்த தலைமுறை கிளர்ந்தெழ ஒரு புதிய உந்துதலை உருவாக்கும் என்பதால், இந்தக் கவிதையை வெளியிட்டு, உணர்வுகளை மாற்றங்கள் தோன்ற வழிகாட்டியாக்கிடும் மறுமலர்ச்சிக் கவிஞர் புதுவைச் சிவம் பேரவைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# பாவலர் புதுவைச் சிவம் இயற்றிய குறுங்காவியங்கள் - ஓர் அறிமுகம்

*முனைவர்* **சிவ. இளங்கோ**

மொழியின் வளத்தையும், அம்மொழியினத்தின் வரலாறு, பண்பாட்டுக் கூறுகள், முதிர்ந்த குறிக்கோள்கள் ஆகியவற்றைக் கொண்டும் விளங்குவதே இலக்கியமாகும். தமிழில் இத்தகைய இலக்கியங்கள் நிறையவே உள்ளன. இவற்றுள் வாழ்த்து, வணக்கம், வருபொருள் என்ற மூன்று மங்கல வகைகளில் ஒன்றெனக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு வகை உறுதிப் பொருள்களை உணர்த்துவதாகவும், அச்சமுதாயத்தின் அனைத்துவிதப் பண்பாட்டுக் கூறுகளையும் உள்ளடக்கியதாகவும் படைக்கப்படுவது காப்பியங்கள் என வழங்கப்பட்டன. இவற்றுள் ஒன்றோ, பலவோ குறைந்துவரின் அதனைச் சிறுகாப்பியம் என்பர். தமிழில் தொல்காப்பியம் மிகப்பழமையானதாகக் குறிக்கப்பெறுகின்றது. சங்கம் மருவிய காலத்தில் (கி.பி. 100-600) சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரட்டைக் காப்பியங்கள் தோன்றின. சோழர் காலத்தில் (கி.பி. 800-1200) சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற பிற காப்பியங்கள் தோன்றி இரட்டைக் காப்பியங்களையும் சேர்த்து ஐம்பெருங் காப்பியங்கள் எனப்பட்டன. சூளாமணி, நீலகேசி, உதயண குமார காவியம், யசோதர காவியம், நாககுமார காவியம் ஆகியவை ஐஞ்சிறு காப்பியங்கள் எனப் பகுக்கப்பட்டுள்ளன. காப்பிய வளர்ச்சியில் புராணங்களும் இதிகாசங்களும் கூட இணைந்து வழங்கப்பட்டன. கம்பராமாயணம், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர புராணம், நளவெண்பா, வில்லிபாரதம், நைடதம் ஆகியவையும் தமிழில் எழுந்த காப்பியங்களாகக் கருதப்படுகின்றன.

ஐரோப்பியர் வருகைக்குப் பின்னர்த் தமிழ் இலக்கியத்தில் மேற்கத்திய சிந்தனைகளோடு கூடிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. வீரமாமுனிவரின் தேம்பாவணியும், உமறுப்புலவரின் சீறாப் புராணமும் காப்பிய வளர்ச்சி நிலைகளாகக் கொள்ளப்பட்டன. மேலும், மறுமலர்ச்சிக் காலத்தில், நவீனங்கள், நாடகங்கள், சிறுகதைகள், புனைவுகள், உரைநடைகள், ஆய்வுக்கட்டுரைகள், திறனாய்வுப் போக்குகள் என

இலக்கிய வகைமைகளின் ஒவ்வொரு பிரிவிலும் காவியங்களும் குறுங்காவியங்களும் உருவாயின. நவீன இலக்கியத்தில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை படைத்த பிரதாப முதலியார் சரித்திரம், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய நாடகக் காவியமான மனோன்மணீயம், திரு.வி.க.வின் உரைநடைக் காவியமான பெண்ணின் பெருமை, ரா.பி. சேதுப்பிள்ளையின் திறனாய்வான தமிழ் இன்பம் ஆகியவை காவிய வளர்ச்சி நிலைகளின் சான்றுகளாகத் திகழ்கின்றன.

கவிதை நடையில் பாரதியாரின் பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, கண்ணன்பாட்டு ஆகிய குறுங்காவியங்களும் அதே போல் பாரதிதாசனின் குடும்பவிளக்கு, எதிர்பாராத முத்தம், பாண்டியன் பரிசு போன்றவை தற்காலக்காவிய வரிசையில் வைக்கப்படுகின்றன.

### புதுவைச்சிவம் காவியப் படைப்புகள்

தமிழ் இலக்கியங்கள் கூறும் வரலாற்று நிகழ்வுகளைக் கொண்ட மூன்று குறுங்காவியங்களைப் புதுவைச்சிவம் இயற்றியிருக்கிறார். கைம்மை வெறுத்த காரிகை, மறக்குடி மகளிர், காதலும் கற்பும் ஆகிய இம்மூன்று நூல்களும் பண்டையத் தமிழ் மகளிரின் வீரத்தையும், துணிவையும் சங்க இலக்கியப் பாடல்கள் துணையுடன் விளக்கிக் கூறும் வகையில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இலக்கியங்கள் தமிழரின் வாழ்க்கை நெறிக்கும் வரலாற்றுக்கும் சான்றாக உள்ளன. சங்க இலக்கியங்களும் அதனையடுத்த காலத்தில் இயற்றப்பட்ட பக்தி இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாட்டில் கற்பு நெறியை வலியுறுத்துகின்றன. சமூதாயம், அதை ஏற்று ஆணாதிக்கம் நிலை பெற்றுவிட்ட சூழலில், அதை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யவேண்டிய கடினமானதொரு பணியைத் திராவிட இயக்கத்தினர் மேற்கொண்டிருந்தனர். அதே நேரம், தங்கள் நோக்கத்திற்குச் சான்றாக இலக்கியங்களில் தங்களுக்குச் சாதகமான பகுதிகளை மட்டும் சுட்டிக்காட்டி, அவையே தமிழரின் வாழ்க்கை நெறி என்று தங்கள் வாதத்தை வலியுறுத்தும் பணிகளை அவர்கள் மேற்கொண்டனர். இதற்குப் புதுவைச் சிவம் இயற்றி வெளியிட்ட கைம்மை வெறுத்த காரிகை, மறக்குடி மகளிர், காதலும் கற்பும் ஆகிய குறுங்காவியங்களைச் சான்றாகக் கூறலாம். இம்மூன்று நூல்களிலுமே சங்க இலக்கியப்

பாடல்களைச் சான்றாகக் கொண்டு, அவற்றிற்கு எளிமையாகப் பொருள் கூற முற்பட்டு, அதனூடே தங்கள் இயக்கக் கருத்துக்களை ஏற்றி இவையனைத்தும் தமிழர் வாழ்க்கை நெறியே என்று நிறுவ முற்பட்டிருக்கிறார் புதுவைச்சிவம்.

**கைம்மை வெறுத்த காரிகை**

இந்நூல் 1945 ஆம் ஆண்டில் புதுவைப் பூங்கொடிப் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. புறநானூற்றுப் பாடல் (எண் 246) ஒன்றை அடிப்படையாகக் கொண்ட அந்நூலில் பாண்டிய மன்னன் பூதப்பாண்டியன் இறந்தபோது உடன் கட்டை ஏறத்தலைப்பட்ட அவன் மனைவி பெருங்கோப்பெண்டு, அதனைத் தடுத்த புலவர்க்குக் கைம்மைக் கொடுமையை உணர்த்தும் வகையில் பெண்ணுரிமை குறித்த திராவிட இயக்கக் கொள்கை விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்தியச் சமுதாயத்தில் ஒரு சில சாதிகளைத் தவிரப் பெரும்பான்மையும் விதவை மறுமணத்தை முற்றிலுமாக ஏற்காத நிலையில், இருபதாம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் பலர் விதவை மறுமணத்தை ஆதரித்து வந்தனர். திராவிட இயக்கம் தங்கள் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளில் விதவை மறுமணத்திற்கு மிக முக்கிய இடத்தைக் கொடுத்தது.

> **"இந்துமத ஆண் உலகம் தங்களது பெண்ணுலகத்தின் மாட்டு கண்டொழுகும் கொடுமைச் செயல்கள் பலவற்றில் இங்கு நாம் விதவைகளைப் பற்றி மட்டும் கவனிக்க வேண்டியுள்ளது. தன் மனைவியை இழந்த கிழவன் மறுமணம் செய்து கொள்ளலாமென்றும், தன் கணவனை இழந்த மகப்பேறு பெறாத இளமங்கை மறுமணம் செய்து கொள்ளல் ஆகாதென்றும் கூறுவது நடுநிலைமை கொண்ட அறச்செயலாகாது... மறுமணம் விரும்பாத பெண்களைத் தவிர்த்து, ஏனைய கைம் பெண்களுக்கு மறுமணம் செய்வித்தலே நன்று."**

என்று பெரியார் கூறினார். இதுவே திராவிட இயக்கத்தினரின் கொள்கையாகவும் அமைந்தது. இதனை வலியுறுத்தவும் பரப்பும் விதமாகவும் தமிழிலக்கியப் பாடலைத் துணை கொண்டு இயற்றப்பட்ட முயற்சியாக இந்நூலைக் கருதலாம்.

**மறக்குடி மகளிர்**

புதுச்சேரியில் இருந்து வெளிவந்த "தொழிலாளர் மித்திரன்" என்ற இதழின் நிர்வாகத்தினரால் 1945 ஆம் ஆண்டில் இந்நூல் வெளியிடப்பட்டது. பெண்டிரின் வீரம் பகரும் புறநானூற்றுப் பாடல்கள் நான்கினை அடிப்படையாக வைத்து மூன்று இயல்களாக இந்நூல் இயற்றப்பட்டுள்ளது. போருக்குச் சென்ற மகன் புறமுதுகு காட்டினான் என்ற செய்தி கேட்ட ஒரு தாய், அதனை நம்பாமல், அவனுக்கு நான் ஊட்டியது கோழைப் பாலல்ல என்று போர்க்களம் சென்று, அவன் வீரமரணம் அடைந்ததைக் கண்டு பெருமிதப்பட்டதாக, ' படைக்குப் பிந்திய பதரோ என் மகன்' என்ற தலைப்பில் முதல் இயலாகவும்; தன் தமையனையும் கணவனையும் போரில் இழந்த பின்னும் சிறுவனான தன் மகனையும் போர்க்களம் அனுப்பிய பெண்ணின் தீரத்தை, ' சிங்கமனார் வழிவந்த சிங்கமன்றோ என் சிறுவன்' எனுந் தலைப்பில் இரண்டாம் இயலாகவும், போர் நடக்கும் காலத்தில் எங்கே உன் மகன் என ஒரு தாயைக் கேட்டதற்கு அவன் போர்க்களத்திலேயிருப்பான். ' அவனை ஈன்ற என் வயிறு புலி தங்கிச் சென்ற குகைபோல' என்று பெருமை பொங்கப் பதிலிறுக்கும் ஒரு பெண்ணின் கதையை மூன்றாம் இயலாகவும் எளிமையான விருத்த நடையில் புதுவைச்சிவம் இயற்றி வெளியிட்டிருக்கிறார்.

> **"... இன்றைய காலப் பெண்களுக்கு வீரமில்லை. புராணக் கதைகளும், சாத்திரங்களும் அவர்களைக் கோழையாக்கி விட்டன. தமிழ் மரபின் பழைய வீரத்தை அவர்கள் அடைந்தால் தான் சமத்துவம் மலரும்"**

*மறக்குடி மகளிர் (1945) நூலில் முன்னுரை*

என்ற நோக்கத்தில் அதற்காகத் தமிழ் இலக்கியத்தைச் சான்றாக முன்னிறுத்தும் முயற்சியாகவே இந்நூலை இயற்றியிருக்கிறார் புதுவைச்சிவம். பெண்களின் வீரத்தைப் பெண்ணுரிமை என்ற கண்ணோட்டத்திலேயே இதில் புதுவைச்சிவம் கையாண்டுள்ளார்.

> **"... நாட்டு நிலையில் பெண்கள் நாட்டம் கொள்ளவேண்டும். தமிழர் சமுதாயத்தின் மானம் மீட்சியடைய இன்றைய தமிழ்ப் பெண்கள் முன்வந்து உழைக்கவேண்டும். சமத்துவ உரிமை ஓங்க வேண்டும் என்பவையே இந்நூற் பயன்"**

*மறக்குடி மகளிர் (1945) நூலில் முன்னுரை.*

என்று நூலின் முன்னுரையில் புதுவைச்சிவம் குறிப்பிடுகிறார். "பெண்ணுரிமை குறித்த கொள்கையில், பெண்கள் தம் சுய மரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதும் பெண்ணுரிமைக்குத் தகுதியுடையவர்களாகத் தம்மை ஆக்கிக் கொள்வதுமே தலையானவை" என்று பெரியார் குறிப்பிட்டார். திராவிட இயக்கத்தின் இந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் இந்நூலும் எழுதப்பட்டுள்ளதாக இந்நூலின் முன்னுரையில் புதுவைச்சிவம் குறிப்பிடுவதிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

**காதலும் கற்பும்**

வாழ்க்கைத் துணை நலம் பகுதியில் இருபாலரையும் சமமாகப் பாவித்து வேறு சில இடங்களில் ' பெண்ணிற் பெருந்தக்க யாவுள' என்று திருவள்ளுவர் பெண்மையைப் புகழ்ந்தாலும், அவரது கற்பு நிலையும், பரத்தமை குறித்த அவரது கருத்தும் திராவிட இயக்கத்தினரின் விமர்சனத்திற்கு உள்ளாயின. மகளிர் குறித்த திருவள்ளுவரின் குறட்பாக்களை நீக்கிவிட வேண்டுமென்று பெரியார் கூறினார். மகளிர்க்கான கற்பு நெறியை ஏற்காத பெரியார் அது ஆண்களின் சுயநலம் என்றும் சூழ்ச்சி என்றும் அறிவித்தார். அன்றைய காலக்கட்டத்தில் கற்பு குறித்த பெரியாரின் கருத்துக்களை அன்றைய சமுதாயமே குறிப்பாகப் பெண்களே ஏற்காத நிலையில் இக்கருத்தைப் பரப்பத் திராவிட இயக்கத்தினர் பெரிதும் பாடுபட்டனர். இதை வலியுறுத்துவதற்கென்றே இக்கவிதை நூலைப் புதுவைச்சிவம் இயற்றியிருப்பதாகக் கொள்ளலாம்.

> **".... கற்பு என்ற மறநெறியொன்றைக் கடவுளின் பெயரால் புகுத்தினர். இதனை யொப்பிய தமிழர் சமுதாயம் வீழ்ந்தது. ஆரியர் தம் நோக்கத்தில் வெற்றி கண்டனர்."**

என்று புதுவைச்சிவம் 1946 ஆம் ஆண்டில் வெளியிட்ட தனது ' காதலும் கற்பும்' நூலின் முன்னுரையில் குறிப்பிடுகிறார். மேலும் காதல் மணத்தையே அவர் பெரிதும் வலியுறுத்துகிறார்.

> **".. இனியேனும் தமிழர்கள் அறிவுக்கொவ்வாத கற்பு நெறியைக் கைவிட்டுக் காதலின் உயர்வையும் கற்பின் உண்மையையும் உணர்ந்து, வாழ்வில் வளம் பெற்று உயர் நிலையடைய வேண்டும்".**

என்றும் அந்நூல் முன்னுரையில் அவர் குறிப்பிடுகிறார். இதில் கற்பு நெறியைக் கைவிட வேண்டும் என்று குறிப்பிடும் அவர் ' கற்பின் உண்மையையும் உணர்ந்து' என்ற தொடரையும் கையாண்டிருக்கிறார். ஆரியர் வழிவந்த கற்புநெறி, தமிழர் வழிவந்த கற்புநெறி என்று பகுத்துப்பார்க்கும் விளக்கமும் அவரது அம்முன்னுரையில் காணப்படுகிறது. அம்முன்னுரையில்,

> **"... அக்காலத்தில் தமிழர்களிடையே கற்பு நெறி இருந்ததில்லையா எனின், காதல் பற்றிய களவு, கற்பு என்ற இரண்டைத் தவிர, வேறு கற்பு என்று – அதுவும் பெண்கள் மட்டும் பின்பற்றி ஒழுக வேண்டுமென்ற மறநெறியொன்று இருந்ததில்லை."**

என்றும் கூறுகிறார் புதுவைச்சிவம்.

இந்நூல் முழுமையாகக் காதல் மணத்தையே வலியுறுத்துகின்றது. இதன் மூலம் சாதி மறுப்புத்திருமணம் என்ற திராவிட இயக்கக் கொள்கையினைத் தமிழ்ச் சமுதாயம் ஏற்க வைக்க முடியும் என்ற நம்பிக்கையின் பின்னணியையும் இந்தநூலின் வழி அறிந்து கொள்ளலாம். திராவிட இயக்க இதழ்களில் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொள்ள முன்வந்த ஆண்கள், பெண்கள் பற்றிய தகவல்கள் கொடுக்கப்பட்டு, விரும்பியவர்களுக்குச் சீர்திருத்தத் திருமணங்கள் நடத்திவைக்கப்பட்டன. புதுவைச்சிவம் பொறுப்பாசிரியராக இருந்து நடத்திய ' புதுவை முரசு' இதழில் இதற்கான அறிவிப்புகளும் திருமணம் நடந்த செய்திகளும் வெளியிடப்பட்டுள்ளன.

காதல் மணமே தமிழரின் உன்னத வாழ்விற்கு அடிப்படை என்றும் இடைக்காலத்தில் ஆரியர் வருகையால் தவறாகச் சித்திரிக்கப்பட்ட காதல் மணம் தமிழர் நோக்கில் தவறான வழியல்ல என்று நிறுவ இந்நூல் இயற்றப்பட்டதாக இதன் முன்னுரையில் புதுவைச்சிவம் குறிப்பிடுகிறார்.

> **"பாரது வியக்கும் வண்ணம் படைத்த அப்பழங்கீர்த் திக்குக்**
> **காரணம் என்னவென்றே கருதிடின், அக்காலத்தோர்**
> **ஈருளம் ஒன்றுகின்ற இயற்கையாம் காதல் வாழ்வைச்**
> **சீரிய முறையிற் கண்ட திறத்தினால்..."**

என்று காதலும் கற்பும் நூலில் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிடும்

புதுவைச்சிவம், ' மாநிலம் யாவும் போற்ற அதிபுகழொளி வீசிப் பின் ஆரிருள் அடைந்த' தமிழ்நாட்டின் நிலையைக் கூறி, அதற்கான காரணம் தமிழர் வாழ்வில் சேர்ந்துள்ள மூடக்கொள்கை, பொய்நெறி வழக்கம், சாதி, மதம் என்றும் அந்நெறியை விளைத்தோர் ஆரிய மாந்தர் என்றும், தமிழ்ச் சமுதாயம் அடைந்த நிலை குறித்துத் தனது கருத்தை அமைத்திருக்கிறார்.

ஆடு, மாடு ஓட்டிப்பிழைக்க வந்த ஆரியர், தமிழர் வாழ்வில் சிறந்திருந்த காதல் வாழ்வை அழிப்பதற்காகவே கற்பென்னும் நெறியைப் புகுத்தினர் என்ற கருத்தை முன்வைக்கிறார் புதுவைச் சிவம். தலைவனோடு உடன்போக்கு ஏகிய தலைவியைத் தேடி அலையும் செவிலித் தாயிடம், அன்புடைக் காதல் வாழ்வே அறநெறி என்று தமிழ் அந்தணர்கள் அறிவுறுத்துவதாகவும் தம் கருத்தைக் கூறுகிறார் புதுவைச்சிவம். பெண்களுக்கு மட்டும் உரியதாகிய கற்புநெறி என்பது ஆரியரால் திணிக்கப்பட்டது என்று கூறும் புதுவைச்சிவம். ' தன்மனத்திற் கினியரோடு சார்வதே உண்மைக் கற்பு' என்பதுதான் பண்டைத் தமிழரின் காதல் நெறி என்று தமிழ் அந்தணர்கள் அறிவுறுத்துவதாகவும் கூறுகிறார். அதே நேரம் சங்க இலக்கியத்தில் அந்தணர் எனக் குறிக்கப் பெறுவோர் தமிழர் என்றும் அவர்கள் ஆரியப் பார்ப்பாரல்லர் என்றும் அதனால்தான் அவ்வந்தணர் காதல் வாழ்வை ஆதரிக்கின்றனர் என்றும் காவிய நிறைவில் விளக்குகிறார் புதுவைச்சிவம். இவ்வாறு காதல் வாழ்வை ஏற்கும் அந்தணர் என்போரைத் தமிழர் என்பது தம் கருத்து என்பதையும் இந்நூல் முன்னுரையிலேயே குறிப்பிட்டு விடுகிறார் புதுவைச்சிவம். சங்க இலக்கியத்திலும் அவ்வாறுதான் இக்கருத்து அமையப்பெற்றது என்பதையும்.

> **"... இத் தமிழகத்தின்கண் ஆரியப் பிராமணர் என்போர் அறநெறிப் போதகராக ஆகி மக்களிடம் செல்வாக்கும் பெற்றிருப்பதை யறிந்து தம் கூற்றைத் தமிழ் அந்தணர் வாயிலாகத் தமிழருக்கு அறிவுறுத்தியுள்ளனர் என்பதே அச்செய்தி பற்றிய என் சொந்தக் கருத்தாகும்."**


என்று இக்காவிய முன்னுரை மூலம் கூறுகிறார் புதுவைச்சிவம்.

கற்பு என்னும் நெறி ஆணாதிக்கத்தின் வெளிப்பாடே என்று இந்தியப் பெண்ணுரிமை இயக்கங்கள் வெளிப்படையாகப் போராடத்

தொடங்கிய காலத்துக்கு முன்பே, அறிவுக் கொவ்வாத கற்பு நெறியைக் கைவிடவேண்டும் என்ற கருத்தைப் புதுவைச்சிவம் வலியுறுத்தி இருப்பது நோக்கத்தக்கது. இக்கருத்தையே தமிழ் இலக்கியங்களும் கூறியிருக் கின்றன என்று தான் சார்ந்த இயக்கத்தின் கொள்கைக்காகச் சங்க இலக்கியப் பாடல்களைச் சான்றாக்குவதன் மூலம், அவர் காலத்திய சமூகத்தை மறுமலர்ச்சிக்கான இலக்கை நோக்கி ஆற்றுப்படுத்தும் நோக்கம் தெளிவாக்கப்படுகிறது.

காதலும் கற்பும் என்ற தலைப்பில் அமைந்திருக்கும் இக்குறுங்காவியத்தில் கூட ஆரியர்களின் தன்மையைப் பற்றியும் அவர்ளின் கபட நாடகத்தில் தமிழ் அரசுகள் மதிமயங்கித் தமிழ்நாடு இழிநிலைமை அடைந்தது என்ற தமதியக்கக் கருத்தையும் அவர் பரவலாகவும் காவியத்தின் அடிப்படைக் கருவுக்குக் காரணமாகவும் கருதி மதிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது.

பாவலர் புதுவைச்சிவம் இயற்றி வெளியிட்ட மேற்கூறிய மூன்று குறுங்காப்பியங்களுள் ‘காதலும் கற்பும்’ எனும் குறுங்காவிய நூலை முதல் பதிப்பில் உள்ளபடி சிறப்புரை, முன்னுரை, நூல் எடுத்தாண்ட - கலித்தொகைப் பாடல் எனும் வரிசையில் இனிக் காண்போம்.



**சிதம்பரம், இராமசாமி செட்டியார் நகர உயர்நிலைப்பள்ளித்**
**தலைமைத் தமிழாசிரியரும்,**
**பகுத்தறிவுப் புலவருமான**
**தோழர், நா. மு. மாணிக்கம் அவர்கள் கூறிய**

# சிறப்புரை

காதலும் - கற்பும் என்ற இவை, கதைகளே இலக்கியம் என எண்ணும் இந்நாள் எழுத்தாளர் உலகிலேயே பெரிதுங் காணப்படுவன வாகும். இவை தமிழன் வாழ்வில் அமைய வேண்டும் என விரும்புகிறார் தோழர் புதுவைச் சிவம் அவர்கள்.

காமத்தினையே காதலெனவும் கட்டுப்பாட்டிற்காகப் பழிக்கஞ்சி யொழுகும் வாழ்வினையே கற்பெனவும் போற்றி, எங்கேனும் ஒன்றிரண்டு அருகிக் கேட்கப் பெறினும் குலக்கேடு சாதிக்கேடு பொருட்கேடு எனப் பறையறைந்து சாற்றி, அவ்வொன்றிரண்டையும் தீண்டத்தகாத நிலையில் ஒதுக்கிப் படுகுழியிற் றள்ளுவதே நம் சமுதாயத்தி னியல்பு. ஆயினும் மிகத் துணிச்சலோடு. காதலே அறநெறியென்றும் அந்நெறியைக் கடைப்பிடித் தொழுகுதலே தமிழன் வாழ்விற்கு உறுதி யென்றும் விளக்குகின்றார் தோழர் கவிஞர் அவர்கள்.

காதலின் வழியே கற்பு என்ற இம் முறை, இந் நாட்டிற்குப் புதிதல்ல. தற்காலப் பண்டமாற்று முறை நமக்குப் பழையதன்று. இரு முறைகளையும் சீர்தூக்கி ஆய்க என்பதுதான், இச்சிறுநூல் வற்புறுத்துவது. இத்துணிவு, சேரமான் பாலை பாடிய பெருங்கடுங் கோவால் ஊட்டப் பெற்ற தெனலாம்.

இலக்கிய அமைப்புமுறையிலே இவ்வமைப்பே தமிழுக்குப் புதிதெனலாம். முதனூல் வழிநூல் சார்புநூல் என்று இலக்கணம்

கற்பினும், தமிழிலக்கிய வரிசையில் புராணங்கள் ஒழிய வேறு எத்துறையினும் இலக்கணம் இலக்கியமாக வின்று எனல் தெளிவு. இலக்கியப் புலவர்களுக்கு - தமிழ் இலக்கிய வளர்ச்சியில் நாட்டமுடைய அறிஞர்களுக்கு - இச்சிறு நூலை ஒரு வழிகாட்டி யென்றே கூறலாம்.

நண்பர் புதுவைச்சிவம் அவர்கள், புரட்சிக்கவிஞர் அவர்களின் சிறந்த மாணவர் என்பதைத் தமிழுலகு அறிந்ததே யாகும். அவர்களின் தமிழறிவு - சங்க நூற் பயிற்சி - எத்துணை அழுத்தமானது என்பதனை, இச்சிறு நூல் தெள்ளிதின் வெளிப்படுத்துகின்றது.

**"மதிதுணை பெற்றதாலே மாநிலம் யாவும் போற்ற**
**அதிபுகழ் ஒளி வீசிப்பின் ஆரிருள் அடைந்த தந்தோ!"**

என்பனபோன்ற தொடர்கள் படிப்போர்க்குப் பெரிதும் இன்பம் பயப்பனவாகும்.

தமிழ்உலகம் இத்தகைய கவிஞர்களையே பெரிதும் விரும்பிகின்றது; விரும்பவேண்டும் என்பதுறுதி.

தமிழர்கள் தத்தம் பெருமையை யுணர்ந்து கொள்ளுதற்காயினும், பெருமைபெற வாழ்தற்குரிய நெறிகளைத் தெரிந்து கொள்ளுதற்காயினும் இந் நூலினை விரும்பிக் கற்பர்.

இதனைப் பயிலுவோர், தமக்குரிய கண்களையே துணையாகக் கொள்ளலாம்.வேறு கண்ணாடி வேண்டும் என்ப தல்ல.

தில்லை, அன்பன்

28.06.46 நா. மு. மாணிக்கம்.

# கவிஞர் புதுவைச் சிவம் 1946 ஆம் ஆண்டில் வெளியிட்ட காதலும் - கற்பும் நூலுக்கு எழுதிய முன்னுரை

"காதலும் - கற்பும்" என்னும் பெயரிய இச்சிறு நூல், சங்க இலக்கியத் தொகைநூற்களுள் ஒன்றான 'கலித்தொகை' (பாலைக்கலி) 9-ம் செய்யுளின் விளக்கமாகும். அப்பாலைக் கலியைப் பாடினோர் சேரமான் பெருங்கடுங்கோ என்பர். அவர் மட்டுமல்லர், பலர் எனக் கருதுவோரும் உண்டு. செய்யுட்பொருள் நிலையும் இதனை மெய்ப்பிக்கும்.

காதல் விளைவால் நிகழும் உடன் போக்கில் தலைவியைத் தாயரும் தமரும் தேடிச் செல்வதும், பின் மீட்டுக் கொணர்ந்து திருமண முடித்து வைத்தலும் இலக்கண அமைதியுடையனவே, அன்றியும், அவ்வுடன் போக்கைக் குற்றமாகவோ பழிவிளைப்பதாகவோ கருதித், தலைவிக்கு இன்னல் சூழ்வதும் இன்று. ஆனால், அந்நிலை மாறி உடன்போக்கைக் குற்றமெனக் கருதப்பட்டபின், அத்தவறான கருத்தைப் போக்கி உண்மை யுணர்த்த எழுந்ததே, இங்கு எடுத்துக் கொண்ட செய்யுள் என்பது ஆராய்வோருக்குப் புலனகாமற்போகாது.

காதல் வாழ்வு கரைபுரண்டோடிய இத்தமிழகத்தில், அது குற்றமுடையதாகக் கருதப்பட்டதேன்? அப்படிக் கருதியதாலேற்படும் தீமையையுணர்ந்த தமிழ்ப் புலவரொருவர், அப்பழிப்பைப்போக்கத் தம் கருத்தை அந்தணர் வாயிலாகக் கூறியதேன்? இதனைச் சிந்தித்தல் வேண்டும் இன்றைய தமிழுலகம்.

ஆரியர் இந்நாட்டில் குடி புகுந்து தம் ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்பட்டபோது, பல எதிர்ப்புக்கள் நேர்ந்ததுண்டு. அவற்றைச் சமாளிக்க முடியாத அவர்கள், சூழ்ச்சியைக் கையாளத் தொடங்கினர். தமிழர்களின் ஒற்றுமை, வீரம், உயர்வு ஆகியவற்றிற்கு அடிப்படையாக இருப்பது,

அவர்கள் வாழ்வில் அமைந்துள்ள இயற்கையோடியைந்த காதல் முறை என்பதறிந்து, அதனைப் போக்கக் ‘ கற்பு’ என்ற மறநெறி யொன்றைக் கடவுளின் பெயரால் புகுத்தினர். இதனை யொப்பிய தமிழர் சமுதாயம் வீழ்ந்தது, ஆரியர் தம் நோக்கத்தில் வெற்றி கண்டனர்!

அக்காலத்தில் தமிழர்களிடையே கற்பு நெறி இருந்ததில்லையா எனின், காதல் பற்றிய ‘ களவு’ ‘ கற்பு’ என்ற இரண்டைத் தவிர, வேறு ‘ கற்பு’ என்று - அதுவும் பெண்கள் மட்டும் பின்பற்றியொழுக வேண்டுமென்ற மறநெறியொன்று, இருந்ததில்லை.

ஒருத்தி பலரை மணப்பதும், பலர்மீது இச்சை கொள்வதும் கற்பு நெறியல்ல எனக்கூறும் ஒரு நூல். மற்றொன்று அவர்களைக் கற்பரசிகள் என்னும். இவ்விதம் அறிவுக் கொவ்வாத ஆபாச முறைகள் பல அமைந்ததே ஆரியக் கற்பு நெறியாகும்.

இம் மறச் செயற்கற்பைத் தமிழர்கள் மதிமயக்கங் கொண்டு ஏற்றகாலை, அவர்களின் சீரிய வாழ்வு, சிதைவுறத் தொடங்கிற்று. இதனையுணர்ந்த புலவர், (பெயர் இன்னாரெனத் துணிதற்கில்லை; ஆயினும், ஆரிய ஆதிக்கம் இந்நாட்டில் ஏற்பட்டபோது இருந்தவர் என்பதே பொருந்தும்) இத்தமிழகத்தின்கண் ஆரியப் பிராமணர் என்போர் அறநெறிப் போதகராக ஆகி மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருப்பதை யறிந்து தம் கூற்றைத் தமிழ் அந்தணர் வாயிலாகத் தமிழருக்கு அறிவுறுத்தியுள்ளார் என்பது, அச்செய்யுள் பற்றிய என் சொந்தக் கருத்தாகும்.

இனியேனும் தமிழர்கள், அறிவுக் கொவ்வாத கற்பு நெறியைக் கைவிட்டுக், காதலின் உயர்வையும் கற்பின் உண்மையையும் உணர்ந்து, வாழ்வில் வளம் பெற்று உயர்நிலையடைய வேண்டும் என்ற எண்ணத்துடனேயே, இச்சிறு நூலை ஞாயிறு நூற்பதிப்பகத்தின் சார்பில் வெளியிடுகின்றேன். தமிழர்கள் - தோழர்கள் ஆதரிப்பாராக.

இதற்குச்சிறப்புரை எழுதியுதவிய புலவர் நா.மு. மாணிக்கனார் அவர்கட்கும், தம் அரிய நேரத்தையும் சிரமத்தையும் கருதாது முகப்புப் படம் எழுதியுதவிய நண்பர் வி. ஜெகநாதன் அவர்கட்கும் என் நன்றி.

புதுச்சேரி
04.07.46

அன்பன்
ச. சிவப்பிரகாசம்.

# காதலும் - கற்பும்

தண்ணொளி இருளை நீக்கும் தன்மைபோல் தமிழ கந்தான்
ஒண்சு டரறிவி னாலே உயர்வுறுங் கொள்கை கண்டு,
மண்ணுள நாடு கொண்ட வாழ்விருள் யாவும் போக்கிக்
கண்ணென விளங்கக் கண்டோம் காசினி புகழை ஏற்றே!

பாரது வியக்கும் வண்ணம் படைத்தஅப் பழங்கீர்த் திக்குக்
காரணம் என்ன வென்றே கருதிடின், அக்காலத்தோர்
ஈருளம் ஒன்று கின்ற இயற்கையாம் காதல் வாழ்வைச்
சீரிய முறையிற் கண்ட திறத்தினால் என்பர் ஆய்ந்தோர்!

காதல்சேர் வாழ்வு தன்னிற் கருதிடும் இன்ப முண்டு!
தீதிலா நெறியும் நல்ல சிந்தையின் உணர்வும் ஓங்கி,
மேதைய ராகி மக்கள் மேன்மையாம் வாழ்வு கொள்வர்!
ஆதலா லந்த வாழ்வை யடைந்தவர் சிறந்தா ரன்றோ?

அத்தகைக் காதல் வாழ்வில் ஆர்ந்தநல் லறிவு பெற்றுச்
சித்தமே களித்து வாழ்ந்தார் சீர்பெறுந் தமிழ ரந்நாள்!
எத்தலத் தோரும் அந்த இன்றமிழ் வாழ்வ றிந்தே,
மெத்தவே வியந்து போற்றி மேன்மையந் நெறிமேற் கொண்டார்!

உதயமாம் சூரியன் பேர் ஒளியுடன் விளங்கிப் பின்னர்க்
கதிரொளி மறைய நிற்கும் கதியெனத், தமிழர் நாடு
மதித்துணை பெற்ற தாலே மாநிலம் யாவும் போற்ற
அதிபுக ழொளி வீசிப்பின் ஆரிருள் அடைந்த தந்தோ!

இந்நிலை நேர்ந்த தற்குக் காரணம்; இசைபெற் றோங்கும்
செந்நெறித் தமிழர் வாழ்வில் சேர்ந்துள மூடக் கொள்கை
பொய்ந்நெறி வழக்கம் சாதி புன்மதம் என்பர் ஆய்ந்தோர்
அந்நெறி விளைத்தோர் கேட்பின், ஆரிய மாந்த ராவர்!

மாட்டினை ஆட்டை யோட்டி வளநிலம் தேடி இந்த
நாட்டினிற் பிழைக்க வந்த நரிக்குணம் வாய்ந்த அன்னார்,
கேட்டினில் நம்மை வீழ்த்திக் கீழ்நிலைப் படுத்தித், தாமே
மேட்டிமை யான வாழ்வில் விளங்கிட முயல லானார்!

ஆரியக் கூத்தில் அந்நாள் அரசுகள் மதிம யங்கிச்,
சீரிய தமிழர் வாழ்வைச்சிறிதுமே எண்ணா தாகிப்,
பூரிய அன்னார் கொள்கை போற்றியே இந்த நாட்டின்
நேரிய முறைய ழித்து நெறிந்தன அவர்பா தத்தில்!

கற்பென ஒன்று சொன்னார் காதலை அழிக்க அன்னார்!
வெற்பெனுந் தோள ரெல்லாம் விதியற்றுச்சிரமே தாழ்ந்தார்!
கற்பனைப் புலவர் சில்லோர் கருத்திழந் ததனை ஏற்றார்!
பொற்புறும் மாதர் அந்தக் கற்பினை அணியாய்ப் பூண்டார்!

வீழ்ந்தது தமிழர் வாழ்வு! வெற்றிஆரியர்கள் கண்டார்!
வாழ்ந்தது பொய்ம்மைக் கற்பு வளமுறுங் காதல் வீழ்த்தி!
சூழ்ந்தது துன்ப மெல்லாம் சுதந்தரம் வாய்ந்த நாடடில்!
ஆழ்ந்தன புகழ்நல் வீரம் அன்புடன் இன்பம் யாவும்!

இந்நிலை யறிந்து நாட்டின் இழிநிலைக் கிரங்கி மிக்க
செந்நெறி வாய்ந்த ஓர்நற் சீரிய புலவர், அந்தப்
பொய்ந்நெறி யாளர் பொய்யைப் போக்கிடக் காதல் கற்பின்
மெய்ந்நெறி யுணர்த்த லானார்; விளக்குவேன் அதனை யீங்கே.

மண்ணினி லுதய மான மதியமோ என்னத் தக்க
பண்ணிசைக் குயிலாள் இன்பப் பாகெனு மொழியாள் ஓர்சீர்ப்
பெண்ணினல் லாட்கும், மிக்க பேரெழில் ஆற்றல் வாய்ந்த
அண்ணலாம் ஒருவ னுக்கும் அரியநற் காதல் தோன்றச்,

சீரிய தமிழர் முன்னாள் செப்பிய களவு வாழ்வில்
ஈருள மொன்றி யன்னார் யாவரு மறியா வண்ணம்
பேரெழிற் சோலை தன்னிற் பெரிதுவந் தொன்று கூடிப்,
பாருளோர் புகழ்ந்து கூறும் பயனுறும் இன்பந் துய்த்தார்!

இன்னணம் இவர்கள் சின்னாள் இனிதுவந் திருக்க, அந்தப்
பொன்னுறு மேனி யாளின் பொலிவினில் மாற்றங் கண்டே
அன்னையாம் செவிலி மிக்க ஐயமும் அச்ச முங்கொண்
டின்னறுஞ் சோலை போக்க மனமிலா திற்செ றித்தாள்!

காதலால் ஒன்று பட்டுக் கனியிதழ் பறிமா றிப்பின்
தீதிலா இன்பந் துய்த்துத் திகழ்ந்திடும் போழ்தி லந்த
மாதவள் உயிர்ப் பிரிக்கும் வன் செயல் போலேத் தாயும்
காதலன் தனைப்பிரித்தால் கடுந்துயர் மிகுந்தி டாதோ?

' அன்புறு வாழ்வு தன்னில் அளவிலா இன்ப முண்டாம்'
என்றுரைத் திட்டமுன்னோர் இயல்பினை யறிந்தே அன்னாள்,
தன்னுடைய வாழ்வி னுக்குத் தக்கதோர் ஆளன் தேர்ந்தால்,
அன்னவன் தனைப்பிரித்தல் அவள் துயர் வளர்ப்ப தன்றோ?

அதுமுதல் தலைவி, அன்புத் தலைவனை யறிதற் கின்றி
நிதியிழந் தாரின் மிக்க நீள்துயர் கொள்ள லானாள்!
இதையறிந் திட்ட தோழி ஆற்றுதற் கியலா தாகி,
மதிமிகும் தலைவற் சார்ந்தே வழுத்தினாள் நிகழ்ச்சி யாவும்.

தலைவியைக் கண்ணு றாமல் தவித்த அத் தலைவன் றானும்,
நிலைகுலைந் துள்ளஞ் சோர்ந்தான் நிகழ்ந்த அச் செய்தி கேட்டு!
"மலைவிதிற் சிறிதும் வேண்டாம் மணம்புரிந் தவளைக் காப்பீர்!
இலையெனில் உயிர் தரித்தே இரா" ளெனத் தோழி சொன்னாள்.

அவ்வுரை கேட்டான்; ஆழ்ந்த சிந்தனை செய்த பின்னர்ச்,
"செவ்விய நலத்தி னாளைச் சீர்மணம் பேசு தற்கே
ஒவ்விடு வாரோ அன்னாள் பெற்றவர்? ஒவ்வா ராயின்,
எவ்விதம் அவளை யானும் அடைகுவேன்?" என்று நைந்தான்!

அவன்துயர் கண்ட தோழி, "ஐய, உம் குறையி னோடு
குவளையும் நாணுங் கண்ணாள் குறையதும் தீர வேண்டின்,
கவியிருள் தன்னில் வாரும் கன்னியை யொப்பு விப்பேன்!
அவளைநீர் உடன்கொண் டேகி அன்புடன் மணப்பீர்!" என்றாள்

தோழியின் உதவி கேட்டான்; சொல்லொணா மகிழ்ச்சி யெய்தி,
"வாழிய தோழி! உன்றன் வார்த்தையின் படியே யானும்
தாழிருங் கூந்த லாளைத் தனிக்கொடு செல்வேன்" என்றான்.
தோழியும் அவர்கள் வேற்றூர் சென்றிடத் துணைசெய் திட்டாள்!

விடிந்தது; "தலைவி காணோம்" என்றுமே வீட்டா ருக்கு,
நடுங்கிய பாவ னையில் நவின்றனள் தோழி! உள்ளங்
குடைந்திடும் மொழியைக் கேட்டுக் கொக்கரித் தெழுந்த பெற்றோர்,
நடந்தனர் நாலா பக்கம் நங்கையைத் தேடு தற்கே!

ஊர்ப்புற மெங்குஞ் சுற்றி ஓய்ந்து பின் வீடு சேர்ந்தார்;
' சீர்க்குண வதியி னாளைத் தேடியே, கொணரா விட்டால்,
பார்ப்பவ ரெல்லாம் நம்மைப் பழிப்பரே' என்று நெஞ்சம்
வேர்த்திடப் பக்கத் தூர்க்கு விரைந்தனள் செவிலித் தாயும்.

வழியினில் காடு தோன்ற வாய்ந்த அக் காட்டி லெங்கும்
விழியெலாம் செலுத்திச் சென்றாள்; மெய்ம்மையாம் அறமு ணர்த்திப்
பழிதரும் செயல் விலக்கும் பண்புடை அந்த ணாளர்
வழியெதிர் வருதல் கண்டு வணங்கியே அவர்க்குச் சொல்வாள்;

"மக்களின் வாழ்வு தன்னில் வாய்ந்திடும் தீமை போக்கித்
தக்கநல் அறிவு ணர்த்தும் தனிப் பெரும் அந்த ணர்காள்!
மிக்கெழில் வாய்ந்த என்றன் மெல்லியல், ஒருவ னோடே
இக்கொடு வழியிற் செல்லக் கண்டிரோ?" என்று கேட்டாள்.

அந்தணர் தலைவன் சொல்வான்; "அம்மணி, உளப்பி ணிப்பால்
இந்தவெங் கானில் அன்னார் ஏகிடக் கண்டோம்; ஆனால்
சிந்தையில் கவலை மிக்குச் சென்றிடும் உம்மைப் பார்த்தால்,
சுந்தர வதனங் கொண்ட தோகையின் தாயர் போலும்!

அன்னவர் தம்மைத் தேடி அலைகிறீர்! அவர்கள் செய்கை
நன்றென உணர்ந்தீ ரில்லை! நவிலுவேன் ஒன்று கேட்பீர்.
கன்மலை மீது தோன்றும் சந்தனம், கடலின் முத்துப்,
பன்னிடும் யாழின் ஓசை இவைகளின் பயன்தான் என்ன?

விரும்பிடும் பிறர்க்கே யன்றி, விளைந்திடும் இடத்தி னுக்கே
ஒரு பயன் அவற்றா லுண்டோ? உம்மகள் அவையே போல்வாள்!
திருநல மிகக் கொண் டாளின் சிறந்த நற் பயனை அந்தப்
பெருங்குணத் தோன்றல் பெற்றான்! பிழையிதி லென்ன கண்டீர்?

அன்புடைக் காதல் வாழ்வே அறநெறி! அதனைக் கொள்ளத்
தன்மனக் கினிய ரோடு சார்வதே உண்மைக் கற்பு!
வன்புரை பேசும் மாக்கள் வழுவென இதனைச் சொல்வார்!
நன்றுடைத் தமிழர் வாழ்வை நசுக்கிடும் பகைவ ரன்னார்!

ஆதலா லுமது செல்வி அடாச்செயல் புரிந்தா ளென்றே
தீதுநீர் அவட்குச் செய்யச் சிறிதுமே எண்ண வேண்டாம்!
பூதலம் போற்று கின்ற புனிதவாழ் வவர்கள் பெற்றார்!
ஏதமோ இதிலொன் றில்லை! ஏகுவீர்" என்றான்; சென்றாள்.

அந்தணர் சொல்வ தேபோல் அறைந்தனர் புலவர்; அந்த
அந்தணர் என்போர் இங்கே ஆரியப் பார்ப்பா ரல்லர்
எந்த நல் உயிரி டத்தும் இரக்கமே கொண்டு, மக்கள்
செந்நலம் பெற உழைத்த சீரிய தமிழர் அன்னார்!

பல புகழ்த் தமிழ ருக்குப் பண்புடை வாழ்வ ளித்த
நலமுறுங் காதல் தன்னைத் தீதென நவிலும் புன்மை
நிலவிடும் வஞ்சர் சூழ்ச்சி நிலைபெறா தொழிய, அந்தப்
புலவர்சொல் உண்மைக் காதல் கற்பினைப் புகல்வேன் ஓர்வீர்!

*****

## எடுத்தாண்ட கலித்தொகைப்பாடல்

"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடைநீழல்
உறித்தாழ்ந்த கரகமும் உரைசான்ற முக்கோலும்
நெறிப்படச்சுவலசைஇ வேறொரா நெஞ்சத்துக்
குறிப்பேவல் செயல்மாலைக் கொளைநடை அந்தணீர்!
வெவ்விடைச் செலல்மாலை ஒழுக்கத்தீர்! இவ்விடை,
என்மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும்
தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர்
அன்னா ரிருவரைக் காணீரோ பெரும?
காணேம் அல்லேம், கண்டனம் கடத்திடை;
ஆணெழில் அண்ணலோடு அருஞ் சுரம் முன்னிய
மாணிழை மடவரல் தாயிர்நீர் போறீர்.

பலவுறு நறுஞ் சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கவைதாம் என்செய்யும்?
நினையுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என் செய்யும்?
தேருங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என் செய்யும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்குமாங் கனையளே!

எனவாங்கு,
இறந்த கற்பினாட்(கு) எவ்வம் படரன்மின்!
சிறந்தாளை வழிபடீஇச் சென்றனள்,
அறந்தலைப் பிரியா ஆறு மற் றதுவே!"

*(பாலைக் கலி, செய்: 9)*



## கவிதையில் ஓர் பதிவு

"நாட்டினிலே மலிந்துள்ள மூடச் செய்கை
நனிபேத வழக்கங்கள், சாத்தி ரங்கள்
வாட்டுகின்ற பெண்ணடிமை யாவும் வீழ்த்தி
வளமுற்ற சமவாழ்வைச் சமுதா யதத்தில்
நாட்டிடவே வேண்டுமெனுங் கொள்கை யோடு
நானுள்ளேன்"

– கவிஞர் புதுவைச் சிவம்
(மறுமலர்ச்சிக் கவிதைகள் – 1945)

இக்குறுங் காவிய வெளியீடு, கவிஞர் புதுவைச் சிவம் 111ஆவது பிறந்த நாள் விழா புதுச்சேரி அரசின் கலைப் பண்பாட்டுத்துறையால் 23.10.2018 அன்று புதுவைத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றபோது கவிஞர் புதுவைச் சிவம் இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்டது.

## மறுமலர்ச்சிக் கவிஞர்
## ச. சிவப்பிரகாசம்

(புதுவைச் சிவம்)

*(23.10.1908 - 31.08.1989)*

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் மக்களுக்கு, மொழி, இன உணர்வுகளை ஊட்டிச், சமுதாயச் சிந்தனையில் வளர்ச்சி கொள்ள வைத்த திராவிட இயக்கத்தின் திறன்மிகு கொள்கைப் படைப் பாளிகளுள் பாரதிதாசனும், பாவலர் புதுவைச்சிவமும் முதன்மை யானவர்கள். முத் தமிழிலும் படைப்புகளை உருவாக்கிப் பன்முகப் படைப் பாற்றல் பெற்றவராக விளங்கிய வர் புதுவைச்சிவம். பகுத்தறிவு இதழ்கள் பலவற்றை நடத்தியவ ராகவும், பகுத்தறிவுப் பதிப்பாள ராகவும், பிரெஞ்சுமொழியில் இருந்து பல இலக்கியப் படைப்பு களை மொழி பெயர்த்தவராகவும், தமிழுக்குத் தொண்டாற்றியவர்; தன் படைப்பாற்றல் முழுமை யையும் தன்பெயர் விளங்கப் பயன் படுத்தாமல் தான்சார்ந்த இயக்கமும் கொள்கையும் வளர விழைந்தளித்து இறுதிவரை நெறி பிறழா இலட்சியவாதியாகப் பயணித்தவர் பாவலர் புதுவைச் சிவம்.